தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட மேட்டமலை, புதுப்பாளையம், சிலோன் காலனி ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆணையிட்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசுக்கு, தொகுதி மக்களுடைய சார்பாக கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

திராட்சை பயிர் செய்தல்

***15953—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான திராட்சை ரகங்களைப் பயிரிடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான திராட்சை ரகங்களைப் பயிர் செய்ய, தற்போது தொடங்கப்பட்டுள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் பல்வேறு ஆராய்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2013 ஏப்ரல் 9]

ஜவஹர்லால் நேருவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்குவேன் என்று கூறி, சிறப்பான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திராட்சைப் பயிருக்கு உலகத்திலேயே சிறந்த இடம் எது என்று கேட்டால், ஆஸ்திரேலியா. Climatic condition அந்த அளவுக்கு அங்கு நன்றாக இருக்கிறது. அதற்கடுத்தபடியாக திராட்சைப் பயிருக்கு எந்த இடம் நல்ல இடம் என்று கேட்டால், தேனி மாவட்டம், Cumbum Valley. அதிகப்படியான திராட்சை விவசாயிகள் அங்கு இருக்கிறார்கள். அங்கு மொத்தம் 1,500 எக்டேரில் திராட்சை விவசாயம் செய்கிறார்கள். உலக அளவில் திராட்சை உற்பத்தித் திறன் எவ்வளவு என்றால், ஒரு எக்டேருக்கு 15 டன் மட்டும்தான் உற்பத்தியாகின்றது; இந்திய அளவில் 30 டன் உற்பத்தியாகின்றது; தமிழ்நாட்டில் ஒரு எக்டேருக்கு 45 டன் திராட்சை உற்பத்தியாகின்றது. அந்த அளவுக்கு அந்தப் பகுதி திராட்சைப் பயிர் வளமாக வரக்கூடிய நிலமாக இருக்கின்றது. Cumbum Valley-யிலே என்ன திராட்சை உற்பத்தி செய்கிறார்களென்றால், பன்னீர் திராட்சை மட்டும்தான் உற்பத்தி செய்கிறார்கள். பன்னீர் திராட்சைக்கு அதிக விலையே கிடைப்பதில்லை. ஒரு கிலோ பன்னீர் திராட்சை உற்பத்தி செய்வதற்கு 15 ரூபாய் வரை செலவாகிறது. ஆனால் ஒரு கிலோ திராட்சை ரூ.12-க்குதான் விற்பனையாகிறது. இவ்வளவு விவசாயம் செய்து, 1,500 எக்டேர் நிலத்திலே விவசாயம் செய்து, நல்ல விளைச்சல் இருக்கக்கூடிய சூழ்நிலையில், அண்டை மாநிலங்களில் உற்பத்தியாகின்ற வெளிநாட்டுத் திராட்சைகளை, ஏற்றுமதிக்கு உகந்த திராட்சைகளை இந்தப் பகுதியிலே உற்பத்தி செய்தால், விவசாயிகளுக்கு நல்லது, தமிழ்நாட்டிற்கு நல்லது, இந்தியாவிற்கு நல்லது என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆகவே, இன்னும் அதிகப்படியான வெளிநாட்டு திராட்சைகளை உற்பத்தி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் கம்பம், சின்னமனூர்

மற்றும் உத்தமபாளையம் பகுதிகளில் 1,960 எக்டேர் பரப்பளவிலே மஸ்கட் என்ற பன்னீர் திராட்சை மற்றும் தாம்சன் சீட்லெஸ் என்ற விதையில்லா திராட்சை ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் திராட்சைப் பழங்கள் பொதுவாக ஏற்றுமதிக்கு உகந்தவையாக இருந்தபோதிலும், ஏற்றுமதிக்குத் தகுதிபெறும் வகையில் விவசாயிகள் உற்பத்தி செய்வதில்லை. அதன் அடிப்படையிலேதான், நாங்கள் அந்த மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். விவசாயிகளை புனே திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு நேரடியாக அழைத்துச் சென்று பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். அதன் அடிப்படையிலே, விவசாயிகளை புனே திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு நேரடியாக அழைத்துச் சென்று பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர், தற்போது Manik Chaman, Sharad seedless, Red globe, Flame seedless grapes போன்ற ரகங்களை ஒட்டுக் கட்டி வழங்கி, பரீட்சார்த்த முறையில் சாகுபடி செய்ய விவசாயிகள் ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைப்படி தொடங்கப்பட்ட இந்த திராட்சை ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக மேற்கண்ட திராட்சை ரகங்களில் தொடர் பலன் மற்றும் பயன் அறியப்பட்டு வருகிறது. தொடர் பலனும், பயனும் அறியப்பட்டு வருவதோடு, Gibberllic acid போன்ற வளர்ச்சி ஊக்கிகள் தெளித்தல், பருவம் அறிந்து கவாத்து செய்தல் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, திராட்சையின் தரத்தினை மேம்படுத்தி ஏற்றுமதிக்கு உகந்ததாக மாற்றவும், திராட்சை ஆராய்ச்சி நிலையம்மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இப்பொழுது மகாராஷ்டிராவில் 50,000 எக்டேரிலே ஏற்றுமதிக்கு உகந்த வெளிநாட்டு திராட்சை பயிரிட்டு வருகிறார்கள். 10 இலட்சம் மெட்ரிக் டன் திராட்சை உற்பத்தி செய்கிறார்கள்.

2013 ஏப்ரல் 9]

அதிலே 2011-2012-லே 22,000 மெட்ரிக் டன் திராட்சை ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். அங்கு 1,100 எக்டேர் நிலத்திலே மட்டும்தான் திராட்சை உற்பத்தி செய்கிறார்கள். மற்ற திராட்சையை அங்கேயே விற்றுவிடுகிறார்கள். தேவைகள் அதிகமாக இருக்கின்றன. அதன் மூலமாக இந்தியாவிற்கு ரூ.545 கோடி அன்னிய செலாவணியும் கிடைக்கிறது. மகாராஷ்டிராவில் 10 ஏக்கர் திராட்சைத் தோட்டத்திற்குப் பக்கத்திலே ஒரு Helipad வைத்திருக்கிறார்கள். டிரான்ஸ்போர்ட் வசதி இருக்கிறது. பழத்தை கட் செய்தவுடன், ஹெலிபேட் மூலம் போகிறார்கள், ஏர்போர்ட்டுக்குக் கொண்டு போகிறார்கள். உடனே ஏற்றுமதி செய்வதற்குண்டான வசதிகளை விவசாயிகளுக்கு அந்த அரசாங்கம் செய்து கொடுக்கிறது.

முற்பகல் 10-25

ஆகையினால் தமிழ்நாட்டில் திராட்சையை எப்படி உற்பத்தி செய்கிறோம் என்றால், வருடத்திற்கு 3 சீசன். 3 சீசன் இருந்தும் நமக்கு வருமானம் இல்லை. ஆனால் மகாராஷ்டிர மாநிலத்தில் வருடத்திற்கு ஒரு சீசனில்தான் கட் செய்கிறார்கள். ஒரு சீசனில் ஒரு ஏக்கருக்கு ரூ.3.00 இலட்சம் இலாபம் கிடைக்கிறது. மீதம் எட்டு மாதம் என்ன செய்வீர்கள் என்று கேட்டால், நாங்கள் ஜாலியாக சுற்றிக் கொண்டிருப்போம், சுற்றுலா செல்வோம், எங்களுக்கு சிரமம் இல்லை, அந்த ஒரு சீசனில் எங்களுக்கு 3 இலட்சம் ரூபாய் கிடைக்கிறது, பெரிய சந்தோஷமான செய்தி என்று சொல்லி, அந்த விவசாயிகள் வெளிநாட்டு ஏற்றுமதி திராட்சையை அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள்.

அதேபோல நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, விவசாயத் துறைக்கு நிறைய மானியம் கொடுத்து விவசாயிகளை நன்றாக உற்சாகம் செய்வது வரவேற்கத்தக்க ஒன்று. திராட்சை விவசாயிகளுக்கு மானியம் என்று பார்த்தால், பறவைகள் பழத்தை சாப்பிடாமலிருக்க நெட் வாங்குவதற்காக ரூ.50,000 மானியம் கொடுக்கிறார்கள். திராட்சை செடி வாங்குவதற்கு ரூ.50,000 மானியம் கொடுக்கிறார்கள். ஆனால் தோட்டக்கலைத் துறை கம்பி வலை போட்டு காய்கறி பந்தல் போட்டு விவசாயம் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் மானியம் கொடுக்கிறார்கள்.

இங்கேயுமே, திராட்சைக்கு கம்பிப் பந்தல் போட்டுதான் விவசாயம் செய்ய வேண்டும். அந்தக் கம்பிப் பந்தல் போடுவதற்கு

மானியத்தை கொஞ்சம் அதிகப்படுத்தி, வெளிநாட்டு திராட்சை ஏற்றுமதிக் கன்றுகளை அரசே கொடுத்து, விவசாயிகளை ஊக்குவித்து, பயிற்சி கொடுத்து, அதிகப்படியான வெளிநாட்டு ஏற்றுமதி ரக திராட்சையை இங்கே உற்பத்தி செய்தால் இந்திய அரசுக்கு வருமானம், தமிழ்நாட்டு மக்களுக்கும் வருமானம், குறிப்பாக Cumbum Valley பகுதிக்கு சிறப்பான ஒரு திட்டமாக இருக்கும் என்று கூறி, திராட்சை ஆராய்ச்சி மையம் உருவாக்கித் தந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் எங்களது நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் கேள்வி ஒன்றும் கேட்கவில்லை, நன்றி சொல்லிவிட்டார்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *நான் அதிகமான மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கடைசியாக நன்றி சொல்லி உரையை முடித்தீர்கள் அல்லவா? மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் அங்கே திராட்சை ஆராய்ச்சி மையம் அமைப்பதன் நோக்கமே, அங்கே பயிர் செய்கின்ற திராட்சை விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்க வேண்டும் மற்றும் ஏற்றுமதிக்கு உகந்ததாக தரத்தை உயர்த்தி அங்கே அதிக அளவில் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான் அங்கே திராட்சை ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் திராட்சை பரப்பு விரிவாக்க திட்டத்தின்மூலமாக முதலாம் ஆண்டு ஒரு ஹெக்டேருக்கு ரூ.3,000 வீதமும், இரண்டாம் ஆண்டு பராமரிப்பிற்காக ரூ.10,000 வீதமும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு இந்தத் திட்டத்திலே 100 ஹெக்டேர் பரப்பு விரிவாக்கத் திட்டம் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*